# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,573 — 1958 ඔක්තෝබර් 31 වැනි සිකුරාදා — 31.10.1958

11,573 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III—காணிகள்

## காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய அறிவித்தல்கள்

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தின்படியும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியுமான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தின்படியும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்க காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு செப்டம்பர் மீ 25 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, காணி அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம்
காணி, காணி அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் } QB 261/J 57 LG 16.

காணியின் விபரம்

கொழும்பு டிஸ்திறிக் கேவகம்கோறள, தவலகொட என்னும் கிராமத்திலிருக்கும் கொஸ்கஹகும்புற என்னும் காணியிலிருந்து சுமார் 600 × 14 சதுர அடி விசாலமுள்ள ஒரு பகுதி : எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : கொஸ்கமஹுயா ;

கிழக்கு : அதே காணியின் மிகுதிப்பகுதி (வரம்பு) ;

தெற்கு : அதே காணியின் மிகுதிப்பாகுதி ;

மேற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி.

---

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நிலமும், நில அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 3 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : எல். எச்./எ. 1079.
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 57/58 எல். ஜி. 360/எல். எச்./எ. 1079.

காணியின் விபரம்

களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை தொட்டமுனையில், பாணந்துறை நகர சபையின் எல்லைகளுக்குள் 4 ம் வட்டாரத்தில் தென் பட்டிய கிராமத்தில், கொழும்பு-காலி ரோட்டில் வரிமதிப்பு இலக்கம் 311, 313 ம் இலக்கங்களைக் கொண்ட எமமுதுகஹவத்தை அல்லது புலுகஹவத்தை அல்லது எட்டவெல்தெனியா என்னும் காணியில் சுமார் 21.05 பேர்ச்சஸ் விசாலமான ஒரு காணித் துண்டு. அதன் எல்லைகள் :—

வடக்கு : நெல்லும்மாவத்தை ரோட் ;

கிழக்கு : திருமதி எம். எ. பெரேரா, உரிமைகூறும் நல்லுறுவ கிராமத்தில் இருக்கும் துடுவ ரோட்டில் 22, 24 ம் இலக்கங்களைக் கொண்ட பணகஹவத்தை என்னும் காணி ;

தெற்கு : அதே காணியின் எஞ்சிய பாகமும் நெலும் வெளியும் (பாக்)-(நகர சபைக்குரிய காணி)

மேற்கு : கொழும்பு-காலி ரோட்.

---

**1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நிலமும், நில அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 15 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : எல். எச்./எ. 2038.
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 57/58 எல். ஜி. 516.

காணியின் விபரம்

(1) களுத்துறை மாவட்டத்தில், பாணந்துறை தொட்டமுனையில், வலாபொல பட்டிய கிராமத்திலிருக்கும் ஹீத்தப்பிட்டியாவத்தை அல்லது ஹெரலியவத்தை என்னும் காணியில் சுமார் 0 ஏ. 1 று. 0 பே. விசாலமான ஒரு பாகம். அதன் எல்லைகள் :—

வடக்கு : குறுப்புமுல்லயிலிருக்கும் எம். டீ. பீரிஸ் குணரத்ன உரிமைகூறும் ஹேன அல்லது தெல்கஹவத்தை என்னும் காணி ;

கிழக்கு : குறுப்புமுல்லயிலிருக்கும் ஏ. எச். விஜேவார்த்தனவும், வலாபொல, பட்டியவிலிருக்கும் ஏ. எம். விஜேவார்தெனவும், ஹெட்டிகே மென்சோ பெர்னாந்துவும், ஹெட்டிகே என்சோ பெர்னாந்துவும் உரிமைகூறும் அதே காணியின் ஒரு பாகமும் அதே காணியில் எஞ்சிய பாகமும்.

தெற்கு : அதே காணியில் எஞ்சிய பாகம் ;

மேற்கு : எகொட உயணையிலிருக்கும் பி. பெர்னாந்து உரிமைகூறும் ஹீத்தபிட்டியாவத்தை அல்லது ஹெரலியவத்தை என்னும் காணியும் ஹீத்தப்பிட்டியாவத்தை கிராமச் சங்கப் பாதையும் ;

(2) களுத்துறை மாவட்டத்தில், பாணந்துறை தொட்டமுனையில், வலாபொல, பட்டிய கிராமத்திலிருக்கும் ஹீத்தப்பிட்டியாவத்தை அல்லது ஹெரலியவத்தை என்னும் காணியில் சுமார் 4.5 பேர்ச்சஸ் விசாலமான ஒரு பாகம். அதன் எல்லைகள் :—

வடக்கு : குறுப்புமுல்லயிலிருக்கும் எம். டீ. பீரிஸ்குணரத்ன உரிமைகூறும் ஹேன அல்லது தெல்கஹவத்தை என்னும் காணி ;

கிழக்கு : வலாபொல-குறுப்புமுல்ல கிராம எல்லையும் குறுப்புமுல்லயிலிருக்கும் என். சி. பெர்னாந்துவும் மற்றவர்களும் உரிமைகூறும் கஹடகஹவத்தை அல்லது தெல்கஹவத்தை என்னும் காணி ;

தெற்கு : அதே காணியில் எஞ்சிய பாகம் ;

மேற்கு : வலாபொல பட்டியவிலிருக்கும் ஏ. எம். விஜேவார்தண உரிமைகூறும் அதே காணியில் ஒரு பாகம்.

---

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தின்படியும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியுமான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தின்படியும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்க காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 15 ந் வ.

சீ. பீ. டி சில்வா,
காணி, காணி அபிவிருத்தி மந்திரி.

டிஸ்திறிக் எசண்டுவின் இலக்கம் : LD/A 27.
காணி, காணி அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J 57/58 E 644.

காணியின் விபரம்

கண்டி மாவட்டம், உட பலாத்தை பெ. இ. உ. பகுதி, உலபனே தலைமைக்காரரின் பகுதி, உலபனே கிராமத்தில் உலபனேவத்தை அல்லது போகொள்ளேவத்தை என்ற காணியில் கீழ்வரும் எல்லைகளைக்கொண்ட சுமார் 2 ஏக்கர் விசாலமான பாகம்.

வடக்கு : கம்பளை—நாவலப்பிட்டிய பிரசித்த ரோட்டு ;

கிழக்கு : இக்காணியின் மீதிப்பாகம் ;

தெற்கு : இக்காணியின் மீதிப்பாகமும், கிராம சங்கத்து ரோட்டும் ;

மேற்கு : கிராம சங்கத்துப் பாதையும், கம்பளை–நாவலப்பிட்டிய பிரசித்த ரோட்டு

---

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நிலமும், நில அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 7 ந் வ.

சீ. பீ. டி சில்வா,
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் எசண்டுவின் இலக்கம் : LB. 2348.
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J. 57/58, T 314.

காணியின் விபரம்

மாத்தறைப் பிரிவு, வெல்லபொட பத்து இன்னும் நாலு கிறவெட் டீ. ஆர். ஓ., வின் பகுதியில், இனிகஸ்முள்ள கிராமத்தலைவரின் பிரிவில், பள்ளிமுல்லையில் உள்ள எறக்குறைய 1 ஏக்கர் விசாலமான கங்கஅத்தரவத்த அல்லது நோஸ்கஸ்வளவ்வேவத்த என்ற காணி, எல்லைகள் :—

வடக்கு : நில்வளா கங்க ;

கிழக்கு : திரு. கவ்தமதாஸ சகோதரர்களால் உரிமை கேட்கப்படுகிற காணி ;

தெற்கு : மாத்தறை-தங்கல்ல பீ. டப்ளியு. டீ. ரோட் ;

மேற்கு : இலங்கைப் போக்குவரத்து சபை காரியாலயத் தோட்டம்.

---

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரமும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியுமான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரமும் நிலமும், நில அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 7 ந் வ.

சீ. பீ. டி சில்வா,
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் எசண்டுவின் இலக்கம் : LB. 2351.
நிலமும், நில அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J 57/58, E 297.

காணியின் விபரம்

மாத்தறைப் பிரிவு, வெலிகம் கோரளை டீ. ஆர். ஓ. வின் பகுதியில், பெலான கிராமத் தலைவரின் பிரிவில், பெலானயில் உள்ள டிங்கிவத்த என்ற காணியிலிருந்து ஏறக்குறைய 3 றூட், 7.29 பேர்ச்சஸ் விசாலமான ஒரு நிலத்துண்டு. எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : வியனராளகெவத்த இன்னும் களேவத்த (பாடசாலைத் தோட்டம்),

கிழக்கு : வெதகெ கொரெடுவ என்ற காணி ;

தெற்கு : கடற்கரை ;

மேற்கு : டிங்கிவத்தயின் " D " துண்டு.

---

**1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்க காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட் த்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 4 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, காணி அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : 3/62/4/58/87.
காணி, காணி அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J 57/58 LG. 148.

காணியின் விபரம்

குருநாக்கல் மாவட்டம் தேவமத அட்பட்டு, பணுக்கடுவ பகுதி, மகுலேபிட்டிய கிராமத்தில் மக்குலேபிட்டிய அல்லது மீகாமுள்ளவத்தமுள்ள என்னும் காணியில் ஒரு பாகம் ஏறக்குறைய ஏ. 0, றூ. 0, பே. 32.

எல்லைகள் :—

வடக்கு : மகாப்பிட்டிய—மக்குலேபிட்டிய கிராமச்சங்கத்தெரு ;

கிழக்கு : ஆர். டி. எம். பண்டாவுக்குரிய அதேகாணியின் மிகுதிப்பாகம் ;

தெற்கு : எச். பி. ரண்கிராவுக்குரிய வார இஸ்வத்த அல்லது மாறகஹாமுலவத்த என்னும் காணி ;

மேற்கு : எம். றங்ஹாமிக்குரிய மக்குலேபிட்டிய என்னும் தோட்டமும், ஆர். டி. எம். பண்டாவுக்குரிய மக்குலேபிட்டிய என்னும் காணி.

---

**1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி மந்திரி சார்ல்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செயகின்றேன்.

கொழும்பு,
1958 ஆண்டு ஒக்டோபர் மீ 3ந் உ.

சி. பி. டி சில்வா,
காணி, காணி அபிவிருத்தி மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : 3/62/4/58/100.
காணி, காணி அபிவிருத்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J 57/58 LG 391.

காணியின் விபரம்

(1) குருநாக்கல் மாவட்டம், தேவமதி அட்பட்டு அங்வெள்ள பலாத்த, பால அங்வெள்ள கிராமத்தைச்சேர்ந்த கந்தேஹேன என்னும் காணியின் பகுதி ஏறக்குறைய ஏ. 0, றூ. 0, பே. 07. எல்லைகள் :—

வடக்கு : கிராமச்சங்க அடிப்பாதை ;
கிழக்கு : எச். எம். பண்டாவுக்கும் மற்றும் சிலருக்கும் சேர்ந்த மீகாமுளவத்த அல்லது தளகாமுலவத்த என்னும் காணி ;
தெற்கு : அதே காணியின் மிகுதிப் பாகம் ;
மேற்கு : கிராமச்சங்க அடிப்பாதை.

(2) குருநாக்கல் மாவட்டம், தேவமதி அட்பட்டு, அங்வெள்ள பாலத்த, பால அங்வெள்ள கிராமத்தைச்சேர்ந்த மீகாமுலவத்த அல்லது தளகாமுலவத்த என்னும் காணியின் பகுதி ஏறக்குறைய ஏ. 0, றூ. 0, பே. 09. எல்லைகள் :—

வடக்கு : தற்போதுள்ள அடிப்பாதை ;
கிழக்கு : எச். எச். டிங்கிரி பண்டாவுக்குரிய களஹிட்டியாவ என்னும் காணி ;
தெற்கு : அதே காணியின் மிகுதிப்பாகம் ;
மேற்கு : எச். எம். கிறிபண்டாவுக்கும் மற்றும் சிலருக்கும் உரிய கந்தேஹேன என்னும் காணி.

(3) குருநாக்கல் மாவட்டம், தேவமதி அட்பட்டு, அங்வெள்ள பலாத்த, பால அங்வெள்ள கிராமத்தைச் சேர்ந்த களஹிட்டியாவ என்னும் காணியின் பாகம். ஏறக்குறைய ஏ. 0, றூ. 0, பே. 17. எல்லைகள் :—

வடக்கு : அதே காணியின் மிகுதிப்பாகம் ;
கிழக்கு : எச். எம். பண்டாவுக்குரிய களஹிட்டியாவ பிள்ளாவ அல்லது வத்த ;
தெற்கு : எச். எம். பண்டாவுக்கும் மற்றும் சிலருக்குமுரிய காணி ;
மேற்கு : எச். எம். பண்டாவுக்குரிய மொறகாமுளவத்த அல்லது தனகாமுளவத்த (தோட்டம்) மற்றும் அடிப்பாதை.

(4) குருநாக்கல் மாவட்டம், தேவமதி அட்பட்டு அங்வெள்ள பளாத்த, அங்வெள்ள கிராமத்தைச் சேர்ந்த களஹிட்டியாவ பிள்ளாவ அல்லது வத்த என்னும் காணியின் பாகம் ஏறக்குறைய ஏ. 0, றூ. 0, பே. 09. எல்லைகள் :—

வடக்கு : தற்போதுள்ள அடிப்பாதை ;
கிழக்கு : அதே காணியின் மிகுதிப்பாகம் ;
தெற்கு : அதே காணியின் மிகுதிப்பாகம் ;
மேற்கு : எச். எம். டிங்கிறிபண்டாவுக்குரிய களஹிட்டியாவ என்னும் காணி.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 195 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பப்பட இலக்கம் ஏ. 4,221. கொரக்ககொட கிராமம், கிழக்குப் பஸ்துன் கோரளே, களுத்துறை மாவட்டம்

| துண்டு. | காணியின் பெயர் | விபரம் | உரிமைகோருவோரின் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பிந்தமுல்ல .. | அணே .. | அனுத்கம கந்தவிஹாரையில் இருக்கும் வணக்கத்திற்குரிய பொத்துவில சரணதிஸ்ஸ | 0 0 19·6 |
| 2 | எலியாஸ்சகும்புற | அணே .. | உடவெல, அகலவத்தையில் இருக்கும் கரண்ணகொட முதலிகே டொன் எல்பேர்ட் ஜயதிலக்கவும், கரண்ணகொட முதலிகே கரோலிஸ் ஜயதிலக்கவும் | 0 0 15·7 |
| 3 | மாகும்புற .. | அணே .. | உடவெல, அகலவத்தையில் இருக்கும் மகா தந்திரிகே நியஸ் சிஞ்ஞோ, மாலேவண ஆரச்சிகே பாரொன் சிஞ்ஞோ, மாலேவண ஆரச்சிகே பிலெ சிஞ்ஞோ, மாலேவண ஆரச்சிகே அகோஸ் சிஞ்ஞோ, ஆகியோர் | 0 0 4·1 |
| 4 | புவக்கஹவியத்த .. | அணே .. | பின்னகொட, அகலவத்தையில் இருக்கும் டொன் பிரம்பி ரணசிங்கவும், டொன் ஜேம்ஸ் ரணசிங்கவும், அகலவத்தையைச் சேர்ந்த வேததேவ கங்காணம்கே எக்ஸஸ் அப்புஹாமியும், ஜயலத் ஆரச்சிக்கே டோனு பொடிநோனாஹாமினே | 0 0 20·6 |
| | | | மொத்தம் .. | 0 1 20·0 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ந் திகதி காலை 10.0 மணிக்கு அகலவத்தை டீ. ஆர். ஓ., வின் கந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 22 ந் உ.

கே. பி. திசாநாயக்க,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

குறிப்பு இலக்கம் எல். எச்./பி. 105.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பப்பட இல. எ. 4,215. மூணகம கிராமம், ரைகம் கோரளே, களுத்துறை மாவட்டம்

| துண்டு. | காணியின் பெயர் | விபரம் | உரிமைகோருவோர் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | சொலொம்கேகும்புற | அணே .. | உடுவ, ஹொரணவைச்சேர்ந்த எச். ஏ. மாட்டினும், எச். ஏ. டெபோ சிஞ்ஞோவும் | 0 0 5.8 |
| 2 | கொடபரகஹகும்புற .. | அணே .. | மூணகம, ஹொரணவைச்சேர்ந்த கே. டீ. எல். குணத்திலக்க, கே. டீ. டீ. குணத்திலக்க, அமரசிங்க பபிலிஸ் சிங்ஹ, வை. யவானிஸ், ஹிந்துபெல்பொல, ஹொரணவைச்சேர்ந்த டீ. எல். டீ. குணவார்தென | 0 0 10.4 |
| 3 | சூரகே ஒவிட்ட .. | அணேயும், சுலூசைக் கொண்ட நீர்ப்பாச்சன வாய்க்காலும் | ஹொரணவைச் சேர்ந்த பி. டி. எல். குணசேகர .. .. | 0 0 28.1 |
| 4 | மிதெல்லகொட கும்புற அல்லது மிதெல்ல கஹகும்புற | ஷெ .. | ஹொரணவைச்சேர்ந்த பீ. டி. எல். குணசேகர, மூணகம, ஹொரணவைச்சேர்ந்த பீ. டீ. பீ. குணசேகர, பீ. டி. சைமன் சிஞ்ஞோ, குறுகொட, ஹொரணவைச்சேர்ந்த கே. டீ. ஆர். குணத்திலக்க, உடுவ, ஹொரணவைச்சேர்ந்த பீ. ஏ. யொஸ்டிரிஸ், பீ. ஏ. லொகுசிங்ஹ, வெலிகல, ஹொரணவைச்சேர்ந்த ஏ. காரெஹாமி | 0 1 2.2 |
| 5 | ஷெ .. | அணே .. | ஹொறணவைச்சேர்ந்த தம்பவிடகே பொரோலிஸ், மூணகம, ஹொறணவைச்சேர்ந்த பீ. டீ. பீ. குணசேகர .. .. | 0 0 3.5 |
| | | | மொத்தம் .. | 0 2 10·0 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ந் திகதி காலை 10.0 மணிக்கு ஹொரண டீ. ஆர். ஓ., வின் கந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 23 ந் உ.

கே. பி. திசாநாயக்க,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

குறிப்பு இல. எல். எச்./பி. 163.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின்
9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

இறுதிக் கிராமப் பட இல. 78 ன் அடுத்துப்படியான 7 ம் படம் இத்தபண கிராமம், மேற்குப் பஸ்டுன் கோரளே, களுத்துறை மாவட்டம்

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமை கூறுபவர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 503 | அம்பலம்காவத்தை .. | 6 வயதான 38 றப்பர் மரங்களையும், 12 வயதான 1 முந்திரிகைச் செடியையும் 10 வயதான 1 நாரங்காய் மரத்தையும் கொண்ட றப்பர் காணித்துண்டு | திருமதி எல். எம். பரணவிதான, 26, பிலிசிரிய எவினியூ, பம்பலப்பிட்டிய | 0 0 37.4 |
| | | | மொத்தம் .. | 0 0 37.4 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ந் திகதி, காலை 10.0 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 23 ந் வ.

கே. பி. திசாநாயக்க,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

குறிப்பு இல. எல். எச்./பி. 7

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின்
9 ம் இலக்க காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பப்பட இல. ஏ 4092, பொஹத்தமுல்ல கிராமம், பாணந்துறை தொட்டமுனே, களுத்துறை மாவட்டம்.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரித்தாளியின் பெயர் | விசாலம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | விந்தமுலவத்தை .. | 50 வயதான 2 தென்னைகளும், 1—10 வயதான 3 பாக்கு மரங்களும், 3 வயதான 1 வேப்பமரமும், கம்பி வேலியின் பாகத்தையும் கொண்ட தென்னந்தோட்டம் | பொஹத்தமுல்ல, வாதுவையைச் சேர்ந்த ஜீ. நிகுலஸ் குணவார்தன, வீரசிங்ஹ புஞ்சி நோனு வீரசிங்ஹ சார்லஸ் நோனு, ஜீ. லொரென்ஸினு குணவார்தன | 0 0 06.0 |
| | | | மொத்தம் .. | 0 0 06.0 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ந் தேதி காலை 11 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 24 ந் வ.

கே. பி. திசாநாயக்க,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

இல. LD. 1324

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின்
9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான் கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—நுவரெலியா மாவட்டம், கொறமலே இறைவரிப் பகுதி, பள்ளபனே கோறளேயில் உள்ள கீழ்க்குறிக்கப்பட்டுள்ள காணிகள், பிரமதப் பட இலக்கம் ஏ. 2541 ல் இலக்கம் 1, 2 எனக் காட்டப்பட்டுள்ளவை :—

| துண்டு | காணியின் பெயர் | உரிமை கோருபவர் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | வட்டவலஹேனே .. | மஸ்வலே, மொறப்பே வாசி, எம். கே. முதலிஹாமி .. .. .. | 0 0 4.2 |
| 2 | ஷெ .. | மஸ்வலே கடதொற வாசி, களுபோகெதற முடியான்ஸி .. .. .. | 0 0 2.5 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ந் திகதி, காலை 10.0 மணிக்கு மொறப்பே போதிமலகறமய ஆலயத்தில் பிரசங்க மண்டபத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நுவரெலியாக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 24 ந் வ.

திஸ்ஸ தேவேந்த்ர,
மாவட்ட நில அதிபர்.

### 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

நில, நில அபிவிருத்தி மந்திரியவர்களால் தீர்மானிக்கப்பட்டு, 1954 ம் ஆண்டு ஒக்றோபர் மாதம் 1 ந் திகதியிடப்பட்ட 10,720 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற் படிசட்டத்தின் 5 ம் பிரிவின் கீழ் அமைந்த 1954 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ந் திகதியிடப்பட்ட ஜே. 54, ரி. 47 ம் இலக்கப் பிரகடனத்தின்படி நுவரெலியா மாவட்டம், உடஹேவஹெற்றை இறைவரிப் பகுதி, டியதிலக கோறளையில் ஹங்குறன் கெத்தை நகரில் (உடமலுவா), யட்டிஹங்குருன்கெத்தை, ஹறக்கம கிராமங்களில் உள்ள கீழ் சொல்லப்படும் காணிகள்.

பிரதமப் படம் இலக்கம் வ. 2,442 ல் துண்டுகள் 2, 3, 6, 7, 8, 9, 13 எனக் குறிக்கப்பட்டிருப்பவை.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைகோருபவர் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | ஹங்குறன்கெத்தை எஸ்றேற் | ஒரு நிரந்தரமான கட்டிடமும், பி. டபிள்யு. டீ. றோட்டின் பகுதியும் கொண்ட தரிசு நிலம் | ஆர். ஈ. எஸ். டீ. சொய்சா, மேற்பார்வை : கார்சன் கம்பர்பாச் அண்ட் கம்பனி லிமிட்டெட், த. பெ. இலக்கம் 24, கொழும்பு | 0 1 16.2 |
| 3 | ஷை .. | 30–40 வயதுள்ள தேயிலை, 30–40 வயதுள்ள 54 தென்னைகள் கொண்ட தென்னந் தோப்பு, 30–40 வயதுள்ள தென்னைகளும், பி. டபிள்யு. டீ. றோட்டின் பகுதியும் கொண்ட 30–40 வயதுள்ள நெற்காணியும் கொண்ட நிலம் | ஷை .. .. | 5 2 7.4 |
| 6 | பெரும் பொத கெதற இடம | செய்கைப்படுத்தாத தோட்டம் .. .. | பெரும்பொதகெதற டிங்கிரியா, மேற்படி சுபயா, மேற்படி கிரிபுஞ்சா, அங்குறன்கெத்தையில் உள்ள ஹறக்கமவாசிகள் | 0 0 0.9 |
| 7 | பொற்குல்விஹார வத்தை | ஷை .. .. .. | ஹங்குறன்கெற்றைபொற்குல் விஹாரையின் முக்கிய தர்ம கர்த்தா, ஹங்குறன்கெற்றை வாசி, P. B. அத்தநாயகா | 0 0 0.8 |
| 8 | அம்பகஹவத்தை | 2 பலாவும், 15–20 வயதுள்ள 1 மாமரமுங்கொண்ட தோட்டம் | ஹங்குறன்கெற்றை, ஹறக்கமவாசி பெரும் பொதகெதற கிரி உக்குவா | 0 0 1.5 |
| 9 | பொற்குல் விஹார வத்தை | 5–6 வயதுள்ள 2 கோப்பிக் கன்றுகள் கொண்ட தோட்டம் | ஹங்குறன்கெற்றை, பொற்குல் விஹாரையின் முக்கிய தர்மகர்த்தா, P. B. அத்தநாயக்கா | 0 0 0.3 |
| 13 | ஹங்குறன்கெற்றை எஸ்ரேற் | 30–40 வயதுள்ள தேயிலை, 30–40 வயதுள்ள நெற்காணி, பாதை, பி. டபிள்யு. டி. றோட்டின் பகுதி, இவை கொண்ட தோட்டம் | ஆர். ஈ. எஸ். டி. சொய்சா, மேற்பார்வையாளர், கார்சன் கம்பப்பார்ச் அண்ட் கம்பெனி லிமிட்டெற், கொழும்பு | 8 2 15.7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமா 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ந் திகதி காலை 10.0 மணிக்கு ஹங்குறன்கெற்றை வாடி வீட்டில் என்முன்பாகவெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நுவரெலியாக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 24 ந் உ.

திஸ்ஸ தேவேந்த்ரா,
மாவட்ட நில அதிபர்.

---

### 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

சப்லிமெண்டறி இலக்கம் 4, கடைசிக் கிராமப் பிளான் 241 முன்கிரிகல கிராமம், வெஸ்ட்கிருவா பத்து, அம்பாந்தோட்டை டிஸ்திறிக்

| துண்டு. | காணியின் பெயர் | விபரம் | விசாலம் ஏ. றூ. ப. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 237 | மானகேஹேன .. | 35 வருட வயதுள்ள தென்னைமரங்களுள்ள தோட்டம் | 0 0 4.7 .. | லொட் இலக்கம் 34, பகுதி (பீ. பீ. 306704), உறுதி கூறுவோர், பபுனுமுள்ள விதானகே தொன் சார்ல்ஸ், முன்கிரிகள |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ந் திகதி 12.0 மணிக்கு முன் கிரிகள அரசாங்க பாடசாலையில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு செப்ரெம்பர்மீ 9 ந் உ.

டீ. சிவஞானம்,
டிஸ்திறிக் உதவி அரசாங்க ஏசண்டு.

---

எல். ஏ. 3596.

### 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பப்பட இலக்கம் A. 1,525. கிராமம்—உலுக்கப்பலம், மஞ்சாடி

| துண்டு. | காணியின் பெயர் | விபரம் | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பணையடிச்சோலை .. | 50 வருடத்திற்கு மேற்பட்ட தென்னந்தோப்பும், சிறு காடாகியதில் காணும் 50 வருடத்திற்கு மேற்பட்ட சில தென்னைமரங்களும், ஓலைக் கொட்டிலும், ஓர் தண்ணீர்க்கிடங்கும் | புத்தளத்திலிருக்கும் திரு. இ. எஸ். எம். காசிம் மரிக்கார், இப்ராஹிம் நய்னு மரிக்காரின் மனைவியாகிய சாரா உம்மா, எம். எச். எம். நய்னுமரிக்காரின் மனைவியாகிய ரவியா உம்மா, பொரல்ல, உப மேற்றிராணியார் வீட்டிலிருக்கும் குருவானவர், சி. எம். முத்துக்குமாரு | 48 3 24 |
| 2 | ஷை .. | சிறு காட்டில் காணும் வயதாகிய சில தென்னை மரங்கள் | ஷை .. .. .. | 16 2 36 |
| | | | மொத்தம் .. | 65 2 20 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ந் திகதி காலை 10.0 மணிக்கு புத்தளம் கச்சேரியில்என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஐப்பசி மீ 17 ந் உ.

ஆ. சி. நவரட்னராஜா,
டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

---

இலக்கம் எல். எம். 5687.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பட இலக்கம் பீ. பீ. ஏ. 924. கிராமம்—திப்புர்ருமுனுவ

| துண்டு. | காணியின் பெயர். | விபரம் | உரிமையாளரின் பெயர் | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொய்யாவத்தகும்புற .. | நெல்வயல் .. | வி. கே. இஸரீபன் பெரேரா, கேகாலை .. .. | 0 1 0.9 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ந் திகதி காலை 10.0 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கேகாலைக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 24 ந் உ.

எல். பி. குன்கமுவ,
டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

---

# காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழுள்ள விளம்பரங்கள்

**மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் முடிக்குரிய காணி கொடுப்பதற்கு ஆட்களை தெரிவு செய்வதற்கு காணிக் கச்சேரிபற்றி அறிவித்தல்**

1. இதன்கீழ் விபரங்கள் கொடுக்கப்படும் காணிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஆலோசனை செய்வதற்காக காணி பண்படுத்தற் சட்டத்தின் கீழ் ஒரு காணிக் கச்சேரியை புத்தளம் மாவட்டம் அரசாங்க அதிபர் நடாத்துவார் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. இக்காணிக் கச்சேரிக்கான திகதியும் நேரமும் விண்ணப்பக்காரருக்கு பின்பு அறிவிக்கப்படும்.

2. புத்தளம் மாவட்ட பரிபாலனத்திற்குட்பட்டவர்கள் அல்லது மேல் குறிக்கப்பட்ட மாவட்டத்தில் நிரந்தர தொடர்புள்ளவர்கள் குறைந்த பட்சம் 10 வருடம் வசித்திருத்தல் மிக அத்தியாவசியம். இப்போப்பட்ட மத்திய வகுப்பு இலங்கையர் மாத்திரம் விண்ணப்பிக்க அனுமதிக்கப் படுவர்.

3. முடிக்குரிய காணி பண்படுத்தல் சட்டத்தின் 171 ம் பிரிவு " நடுத்தர வகுப்பு இலங்கையரை " கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது :—

171. குறித்த ஓர் தேதிக்கு நேர்முந்திய மார்ச்சு (பங்குனி) மாதம் முப்பத்தோராந் தேதியின் முடிந்த வரிமதிப்பு வருஷத்திற்கு வருமான வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி கணிக்கப்பட்ட ஒருவருடைய நியத வருமானம் பன்னிரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்படுமாகில், அவரை அத்தேதியில் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கு ஓர் இடை வகுப்பு இலங்கையர் என்று எடுத்துக்கொள்ளாதிருத்தல் வேண்டும்.

ஆயின்—

(1) புருஷன் மனைவியாகிய இவ்விருவரின் விஷயத்தில் வருமான வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி முறைப்படி கொடுக்கப்பட்ட அறிவித்தலை அனுசரித்து வெவ்வேறு வரி மதிப்புகள் கேட்டுக்கொள்ளப்பட்டும் செய்யப்பட்டும் இருந்தால் போல் அப்புருஷன் மனைவியாகிய ஒவ்வொருவரினதும் நியத வருமானம் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) தக்க அதிகாரமுடைய ஒரு கோட்டாரின் தீர்ப்பின்படி தங்கள் கலியாணம் தள்ளிவிடப்படாத, அல்லது முறைப் படி முடிக்கப்பட்ட ஒருவர் பிரிந்திருத்தல் உறுதியின்படி வேறுகப் பிரிந்திராத புருஷன் மனைவியின் விஷயத்தில், புருஷன் மனைவியாக அவ்விருவரினதும் ஒன்றுகச் சேர்ந்த நியத வருமானம் மொத்தமாக இருபத்தி நாலாயிரம் ரூபாவுக்கு மேற்படுமாகில், அப்புருஷன் மனைவி ஆகிய இருவரில் ஒருவராவது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கு ஓர் இடைவகுப்பு இலங்கையர் என்று எடுத்துக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

4. மனுப்பண்ணுவோர் விண்ணப்பத்தின் இரண்டு பிரதிகள் பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்பட வேண்டும். அனுப்பும் தபால் அட்டையில் இடது மூலையில் " கல்குளிய நடுத்தர வகுப்புக் காணிக்கான விண்ணப்பம் " என்று எழுதப்பட வேண்டும். விண்ணப்பத்தின் ஒரு பிரதியை புத்தளம் அரசாட்சி அதிபருக்கு (அவரின் பேருக்கல்ல) அனுப்ப வேண்டும். மற்றதை விண்ணப்பக்காரன் வசிக்கும் அல்லது நிரந்தர தொடர்புள்ள பிரிவுக்காரியாதிகாரிக்கு அனுப்ப வேண்டும். கீழ்க் காணப் படும் குறிக்கப்பட்ட மாதிரிப் பத்திரத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

5. தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் 10 ஏக்கர் காணி கொடுக்கப்படும் காணி கொடுக்கப்பட்ட ஒரு வருஷத்திற்குள் மேற்படி முழுக் காணியையும் துப்பரவுபண்ணித் திருத்தி வேலியடைத்து தென்னை அல்லது வேறு பயன்தரும் மரங்களை நடுதல் வேண்டும். அதன்பின்பு முழுக்காணியையும் நல்ல நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் யாவும் 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 30 ந் திகதிக்கு முன் புத்தளம் கச்சேரியில் அரசாட்சி அதிபருக்கு கிடைக்க வேண்டும்.

7. காணிக் கச்சேரியின் திகதியும் நேரமும் குறிப்பிட்டு காணிக் கச்சேரிக்கு சமூகம் அளிக்கும்படி எல்லா விண்ணப்பக்காரருக்கும் அறிவிக்கப்பட்ட பின் காணிக் கச்சேரிக்கு நேர்முகமாகச் சமூகம் அளிக்க வேண்டும் அல்லது வேறு ஒருவரைப் பதிலாக அனுப்புதல் வேண்டும். அல்லது விண்ணப்பக்காரர் அல்லது அவரின் பதில் ஆள் காணிக்கச்சேரிக்கு சமூகமளிக்காதவிடத்து விண்ணப்பக்காரன் தமது விண்ணப்பத்தையிட்டு மேலும் அக்கறை கொள்ளவில்லை யென அரசாட்சி அதிபர் அனுமானிப்பார்.

8. இக்காணிக் கச்சேரிபற்றி விபரங்கட்கு புத்தளம் அரசாட்சி அதிபருக்கு எழுத வேண்டும்.

9. விண்ணப்பத்தில் தவறான விபரங்கள் கண்டால் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும். அல்லது தெரிவு செய்தபின் இது கண்டு பிடிக்கப்பட்டால் தெரிவு செய்ததை ரத்துச்செய்யப்படும்.

ஆ. சி. நவரட்ணராஜா,
அரசாங்க அதிபர்.

புத்தளம் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 14 ந் உ.

**கொடுக்கப்படும் காணியின் விபரம்**

கிரியங்களி ஆண்டிகம றோட்டுக் கருகாமையில் கல்குளி வனப்பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் காணியின் 1,500 ஏக்கர் தென்னை செய்கைக்குகந்த தாக 10 ஏக்கர் காணித்துண்டுகள்.

**விண்ணப்ப மாதிரிப்பத்திரம்**

1. விண்ணப்பக்காரரின் பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. வயது : ————.
4. பராபரிக்கவேண்டியவர்கள் : ————.
5. தொழில் : ————.
6. வருட வருமானம் (பிந்திய வருமான வரிக் கணக்கு மதிப்பு இருப்பின் அணைக்கவும்) : ————.
7. காணியின் பண்படுத்தலுக்குச் செலவழிப்பதற்கு விண்ணப்பக்காரரிடமுள்ள பணத்தின் தொகை : ————.
8. விண்ணப்பக்காரன் அல்லது அவரின் மனைவி பேரிலுள்ள ஆதனத்தின் விபரங்கள் : ————.
   (குத்தகை ஆதனங்களும் முடிக்குரிய காணியும் உண்டானால் அவையும்).
9. வேறு விசேஷ தகமைகள் : ————.

————

விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

எல். ஜே. 1366.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

யாழ்ப்பாண ரோமான் கத்தோலிக்க பிஷப் பாண்டவர், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சேமமடு என்னும் கிராமத்திலுள்ள முடிக்குரிய காணியிலிருந்து ஏறக்குறைய ஒரு ஏக்கர் நிலத்தை, அதில் ஒரு கத்தோலிக்க கோவில் நிறுவுதற்கு குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்துள்ளார்.

2. ஆகக்கிட்டிய கத்தோலிக்க கோவில் $5\frac{1}{2}$ மைலுக்கு அப்பால் இருக்கிறது. 29 குடும்பங்களுக்கு இது உதவும். இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக் கூடியதாகவிருக்கிறது. குறித்த விண்ணப்பத்தை, மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய, வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) காலம் : 99 வருடம் ;

(ஆ) வாடகை : வருடம் ரூபா 1 ;

(இ) குத்தகையைப் பெறுபவர்கள், குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக, அந்நிலத்தில் கத்தோலிக்க கோவில் நிறுவுதல் வேண்டும்.

(ஈ) குத்தகை எடுப்பவர்கள் அந்நிலத்தை ஒரு கோவில் ஸ்தாபிக்க உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது.

3. குத்தகை வழங்கக் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

இ. கெ. ஆர். அசரப்பா,
காணிக் கொமிஷனருக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 30 ந் உ.

---

L.J. 1187.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகிய திருவாளர்கள் முருகர் சின்னத்தம்பி, வைரவப்பிள்ளை சின்னத்தம்பி, சின்னத்தம்பி ராமு, சின்னய்யா கணபதிப்பிள்ளை, கதிரவேலு சிதம்பரப்பிள்ளை ஆகியோர் பரந்தன் குமாரபுரம், குமாராலய அபிவிருத்திச் சபையின், குமாராலயத்தின் மூலஸ்தானமும் முதல் மண்டபமும் கட்டுவதற்குப் பரந்தன் காட்டில் முடிக்குரிய நிலத்தில் இரண்டு ஏக்கர் குத்தகைக்குத் தரும்படி விண்ணப்பித்துள்ளனர்.

2. விண்ணப்பித்துள்ள காணி கொடுக்கக் கூடியதாக விருக்கிறது. இதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : 69 ந் துண்டு ;

தெற்கு : ஒழுங்கை ;

கிழக்கு : பழம்பூனகரி றோட் ;

மேற்கு : நாய் ஆறு ;

3. பின்வரும் மற்றும் நிபந்தனைகளுடன் குறித்த காணியை வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 500 இந்துக் குடும்பங்கள் இத்தால் பயன் அடையும். பரந்தன் காணி அபிவிருத்தித் திட்டங்கள் இத்தால் பாதிக்கப்படாது :—

(அ) காலம் : 99 வருடம் ;

(ஆ) வாடகை : வருடமொன்றுக்கு ரூபா 10 ;

(இ) குத்தகையாளர் குத்தகை தொடங்கிய மூன்று வருடத்திற்குள் யாழ்ப்பாண மாவட்ட அதிபரின் திருப்திக்கமைய கோவிலின் தேவைகளுக்காகிய கட்டடங்களை அமைத்துப் போட வேண்டும் ;

(ஈ) குத்தகையாளர் மேற் குறித்த நிலத்தைக் கோவிலுக்கேயன்றி வேறொன்றுக்கும் பாவிக்கக் கூடாது.

4. இக்குத்தகை கொடுக்கக் கூடாதென்று ஆறு கிழமைக்குள் தகுந்த காரணங்காட்டினாலன்றி மற்றப்படி குத்தகை வழங்கப்படும்.

இ. கெ. ஆர். அசரப்பா,
காணிக் கொமிஷனருக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 31 ந் உ.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.